செ.வெ.எண்: 66 நாள்:27.11.2019

# அரியலூர் மாவட்டம்
# பாபாங்குளம் கிராமத்தில் ரூ.6.52 இலட்சம் மதிப்பில் குடிநீர் தொட்டியினை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

அரியலூர் மாவட்டம், அருங்கால் ஊராட்சி, பாபாங்குளம் கிராமத்தில் ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் ரூ.6.52 இலட்சம் மதிப்பில் குடிநீர் தொட்டியினை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தலைமையில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள்.

**இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா அவர்கள் தெரிவித்ததாவது,**

அரியலூர் மாவட்டத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அரசு சீரிய வழியில் பல எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதன்படி, பொதுமக்களின் நலன் கருதி பாபாங்குளம் கிராமத்தில் அடிப்படை வசதிகள் விரைந்து செய்யப்பட்டு வருகிறது. அர்ச்சுனாபுரம் - பாப்பாங்குளம் வரை தார் சாலை அமைத்து கொடுக்கப்பட்டது. அருங்கால் தெற்கு தெருவில் சட்டமன்ற உறுப்பினர் நிதியல் சிமெண்ட் சாலை அமைத்து கொடுக்கப்பட்டது. மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிக்கு போர்வெல் மற்றும் பைப்லைன் போன்ற பல்வேறு வசதிகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும், இக்கிராமமக்களின் நலன் கருதி பல்வேறுத் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது. இன்று ரூ.6.52 இலட்சம் மதிப்பீட்டில் ஆழ்துளாய் கிணறு அமைக்கப்பட்டு மின் இணைப்புடன் சிறிய குடிநீர் தொட்டி அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது. குடிநீரிணை பொதுமக்கள் சிக்கனமாக பயன்படுத்தி பயனடையுமாறு மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) சு.சுந்தர்ராஜன், வட்டார வளர்ச்சி அலுவலர் கலையரசன், வட்டாட்சியர் கதிரவன், அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**